## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TITTAGUDI.

CC.No.156-2015 L.W.6 P.W.5

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.பாண்டியன் | Father / Husband Name | பாரி |
| Village | சின்னக்கொசப்பள்ளம் | Taluk | திட்டக்குடி |
| District | கடலூர் | Age | 35 |
| | | Time | 11.36 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, விதி முறைகளின் படி 11.11.2025 நாளாகிய இன்று திருமதி.B.ஹரிணி பிரியா பி.எ., எல்.எல்.பி., (Hons)., நீதித்துறை நடுவர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது. சாட்சி உண்மையாக சொல்கிறேன் என சத்திய பிரமாணம் செய்கிறார்.

**1, 2, 3 எதிரிகள் ஆஜர், வழக்கறிஞர் ஆஜர்.**

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>

நான் சின்னக்கொசப்பள்ளம் குடும்பத்துடன் வசித்து பெண்ணாடம் சிமெண்ட் தொழிற்சாலையில் லாரி ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு அசா்.1 முதல் அசா.4, பட்டியல் சாட்சி சிவானந்தம் மற்றும் ஆஜர் எதிரிகள் மூவரையும் தெரியும். அன்றைய தினம் உண்மையிலேயே நான்வேலைக்கு சென்றுவிட்டேன் அதாவது சுமாராக கடந்த 7, 8 வருடங்களுக்கு முன்பாக எங்கள் வீட்டில்ல உள்வ ர்கள் சண்டை நடந்ததாக சொன்னார்கள் யாருக்கும் யாருக்கும் என்றால் ? அசா.1 திராவிட சிவதிருநாதன் என்பவருக்கும் வேறு யாருக்கும் யார் என்று தெரியவில்லை. பின்னர் போலிஸ் வந்து கையெத்து கேட்டார்கள் சாட்சி யோசித்து தானாக முன்வந்து காவல் நிலையத்திலா அல்லது வேறு இடமா என்று சொல்லி மீண்டும் காவல் நிலையத்தில ் கையொப்பம் கேட்டார்கள் என்று கூறி கையொப்பம் போட்டேன் என்று கூறினார். தற்போது சமூகம் நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ளஇரண்டாவது கையொப்,பம் என்னுடையதுதான் அந்த கையொப்பம் மட்டும் **அசா.ஆ.2** ஆகும். வேறு யாரும் கையொப்பம்போட்டார்களா என்றுதெரியவில்லை. போலிஸார் சண்டை நடந்ததா என்றுகேட்டார்கள் தெரியாது என்றுகூறினேன்.

**கற்றறிந்த அரசுவழக்கறிஞர் சாட்சி முன்னியில் போலிஸார் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகசர் தயார்செய்து சாட்சி கையொப்பம் இட்டுவிட்டு போலிஸாரிடம் வாக்குமூலம்கொடுத்துவிட்டு தற்போது மறைத்து சாட்சியம் அளிப்பதால் பிறழ் சாட்சியாக பாவிக்க கோரினார் கோரிக்கை ஏற்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சிய சட்டபிரிவு 154(1) ( பி.எஸ்.ஏ பிரிவு 157(1) )ன் கீழ் குறுக்கு விசாரணை**

1.கடந்த 08–10–2014 ம்தேதி மாலை 2.30 ம ணிக்கு நானும், பட்யடில்சாட்சி சிவானந்தம் என்பவரும் அசா.1 திராவிடசிவதிருநாதன் பிள்ளையார் கோவில்தெருவில்

நின்றுபேசிக்கொண்டிருந்ததாகவும் அப்போது பெண்ணாடம் போலிஸார்அங்கு வந்து எங்கள்இருவர் முன்னிலையில் அசா.1 க்கும் ஆஜர் எதிரிகளுக்கும் நடந்த சண்டை சம்மந்தமாக எங்கள் இருவர் முன்னிலையில் அதே இடத்தில் மாதிரி வரைபடம், பார்வை மகசர் தயார்செய்து பார்வை மகசரில் நாங்கள்இருவரும் கையொப்பம் போட்டுவிட்டு தற்போது ஆஜர்எதிரிகள் எனது ஊர்க்காரர்கள், தெரிந்தவர்கள் என்பதால்தான் மேற்ச்சொன்ன கையொப்பத்தையும்., கையொப்பம்போட்ட தேதி, மாதம், வருடம், நேரம் ஆகியவற்றை போலிஸார் விசாணையில்சொல்லிவிட்டு அரசு தரப்பிலிருந்து முழுமையாக விலகி எதிரிகளுக்கு ஆதராவாக பொய்சாட்சியம்அளிக்கிறேன் என்றால் ? சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கையொப்பம் இட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் ? ஆமாம். மேற்ச்சொன்ன கையொப்பத்தைநர்ன காவல் நிலையத்தில் வைத்துதான் போட்டேன் என்றால் ?ஆமாம். சம்பவம் குறித்து எனக்கு நேரிட்டு தெரியாது என்றாலும், யாருக்கும் யாருக்கும் சண்டை நடந்தது என்று தெரியாது என்றால் ? சரிதான்.

**மறு விசாரணை இல்லை**

**TYPED TO MYDICTATION OPENCOURT**
**INPRESENCE OF ACCUSED READOVER**
**TO THE DEPONENT AND ADMITTED BY**
**HIM/HER TO BE CORRECT**

**JUDICIAL MAGISTRATE,**
TITTAGUDI